Annual Subscription – Rs.120/-
ஆண்டு சந்தா – ரூ.120/-

Price – Rs.10/-
தனி பிரதி – ரூ.10/-

# பொறியாளர்
# PORIYAALAR

கட்டடம் - 16
Volume – 16

அடுக்கு - 12
Issue – 12

செப்டம்பர் 2025
September 2025

## 25.10.2025 அன்று சென்னையில் நடைபெறவுள்ள நமது சங்கங்களின் மாநில பொதுக்குழு கூட்டத்தின் அழைப்பிதழ்

**ASSOCIATION OF ENGINEERS TNPWD & TNWRD**
**&**
**ASSISTANT ENGINEERS' ASSOCIATION, TNPWD & TNWRD**
CHEPAKKAM, CHENNAI-5

*Cordially invites you on the occassion of*

**"ANNUAL GENERAL BODY" MEETING OF**
**ASSOCIATION OF ENGINEERS - TNPWD & TNWRD**
**AND**
**ASSISTANT ENGINEERS' ASSOCIATION - TNPWD & TNWRD**

Date : **25.10.2025 Saturday** - Time - 10.35 A.M
**Venue : Savera Hotel**
No.146, Dr.Radhakrishnan Road,
Mylapore, Chennai-600004

Location

*Kindly Participate and offer your positive and constructive Suggestions for strengthening our Associations.*

*Yours affectionately*

**Er.S.MANIKANDAN,** M.E.,
President, AOE

**Er.M.DHANASEKARAN,** M.E.,
General Secretary, AOE,

**Er.S.SRINIVASAN,** M.Tech.,
President, AEA

**Er.H.VELAN,** M.E.,
General Secretary, AEA

**Er.D.SIVAKUMAR,** B.E.,
Treasurer, AOE & AEA

**Place : Chennai** **Date : 25.10.2025**

**PROGRAMME - SCHEDULE**

| | |
|---|---|
| 10.35 A.M | Invocation |
| 10.40 A.M | Welcome Address: |

**AEA- GB MEETING PROGRAMME**

| | |
|---|---|
| 10.45 A.M | Presidential Address : **Er.S.Srinivasan,** President, AEA |
| 10.50 A.M | Annual Report & Briefing of agenda by **Er.H.Velan,** GS-AEA |
| 11.05 A.M | Discussion on Agenda |
| 01.05 A.M | Conclusion and Resolutions |
| 01.15 P.M. | Lunch |

**AOE - GB MEETING PROGRAMME**

| | |
|---|---|
| 02.00 P.M | Presidential Address : **Er.S.Manikandan,** President, AOE |
| 02.10 P.M | Annual Report & Briefing of agenda by **Er.M.Dhanasekaran,** GS-AOE |
| 02.30 P.M | Accounts of AOE,AEA & Legal by **Er.D.Sivakumar,** Treasurer,AOE & AEA |
| | Accounts of ENGIBEF by **Er.D.Rajeshwar Babu,** Treasurer, ENGIBEF |
| | Accounts of PRI by **Er.P.N.S.Mahesh Babu,** RE, PRI |
| 02.45 P.M | Legal report by **Er.A.Abdul Khudus** Jt.Secretary, AOE, Legal Affairs |
| 02.50 P.M | Discussion on agenda |
| 04.45 P.M. | Conclusion & Resolutions |
| 05.00 P.M. | National Anthem |

**Note:** Those who wants accommodation may contact to the following Office Bearers:

**Er.K.Stalin,B.E.,**
Assistant Engineer, WRD &
Vice President, AEA,
No.89, C.N.K.Road, Chepakkam, Chennai-5
**Cell No: 8197836953**

**Er.S.Vetrivel,B.E.,M.B.A.,**
Assistant Executive Engineer, WRD &
Executive Committee Member, AOE
No.89, C.N.K.Road, Chepakkam, Chennai-5
**Cell No: 9940263491**

**பொறியாளர் சங்கம் மற்றும் உதவிப் பொறியாளர் சங்கம்**
**பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை, தமிழ்நாடு**
**சேப்பாக்கம், சென்னை - 600 005**
**தொலைபேசி: 044-2851 5445 / 044-2951 0445**
**பொறியாளர் இராமலிங்கம் இல்லம் : 044 - 2854 4043**
website : www. aoeaeatnpwd.org / e-mail : aoe_aea@yahoo.com, gsaoe.pwd@gmail.com



25.09.2025 அன்று சென்னை, சேப்பாக்கம் பொதுப்பணித்துறை பயிலரங்கில் மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு, பொதுப்பணித்துறையில் பணியில் சேர்ந்த உதவிப் பொறியாளர்களுக்கு 16.09.2025 முதல் 25.09.2025 வரை நடைபெற்ற பயிற்சி வகுப்புகளுக்குச் சென்று பார்வையிட்டு, சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்வின்போது, பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.மங்கத்ராம் சர்மா இ.ஆ.ப., பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு.எஸ்.மணிவண்ணன், சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் திரு.எஸ்.மணிகண்டன் மற்றும் பொதுப்பணித்துறை சார்ந்த அலுவலர்களும், பொறியாளர்களும் உடனிருந்தனர்.




## தமிழ்நாட்டின் மிக சிறந்த பாரம்பரிய நீர்ப்பாசனத்தின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்புகளுக்கு விருது

கோலாலம்பூர் சர்வதேச நீர்ப்பாசனம் மற்றம் வடிகால் ஆணையம் (International Commission on Irrigation & Drainage) சார்பில் 4-வது உலக நீர்பாசன மாநாட்டில் (4th World Irrigation Forum) மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் 10.09.2025 அன்று நடைபெற்றது. இதில் தமிழ்நாட்டில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாரம்பரியமிக்க நீர்ப்பாசன கட்டமைப்புகளான 1852-இல் கட்டப்பட்டு 200 ஆண்டுகளாக பயன்பாட்டிலும் சிறந்த பராமரிப்பிலும் உள்ள செய்யாறு அணைக்கட்டு, 300 ஆண்டுகளாக பயன்பாட்டிலும் சிறந்த பராமரிப்பிலும் உள்ள கொடிவேரி அணைக்கட்டு மற்றும் சோழர் காலத்தில் கட்டப்பட்டு 700 ஆண்டுகளாக பயன்பாட்டிலும் சிறந்த பராமரிப்பிலும் உள்ள நொய்யல் நீர் பாசன கட்டமைப்புக்கும் பாரம்பரியமிக்க நீர்பாசன கட்டமைப்பு விருதினை சர்வதேச நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் ஆணையத்தின் தலைவர் (International Commission on Irrigation & Drainage) டாக்டர் மார்கோ ஆர்சியோரி மற்றும் பொதுச் செயலாளர் டாக்டர் ஆர்.கே.குப்தா அவர்களிடம் இருந்து பொறி.சி.பொதுப்பணித்திலகம், தலைமை பொறியாளர், சென்னை மண்டலம் மற்றும் பொறி.தீ.தமிழ்செல்வி, தலைமை பொறியாளர், மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், விருதைப் பெற்றுக்கொண்டார்கள்.

25.09.2025

**பொதுச் செயலாளர் மடல்**

**பேரன்பிற்கினியீர், பெருமதிப்பிற்குரியீர் வணக்கம்.**

✍ நீர்வளத்துறையில் செயற்பொறியாளர் பதவிக்கான காலிப்பணியிட மதிப்பீடு 26 எண்ணங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்ட நிலையில் உரிய உதவிசெயற்பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும் என தெரிவித்துக்கொள்கிறோம்.

✍ நீர்வளத்துறையில் உதவிசெயற்பொறியாளர் பதவிக்குரிய காலிப்பணியிட மதிப்பீடு 101 எண்ணங்களுக்கு ஒப்புதல் பெறப்பட நிலையில் உரிய அரசாணை விரைவில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

✍ பொதுப்பணித்துறையில் செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் 36 நபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது, விரைவில் பணியமர்வாணை அரசாணை வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

✍ சங்கங்களின் சார்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள (Webinar) இணையவழி **"கற்றல் கருத்தரங்கு"** என்ற தொடர் பயிலரங்கம் 20.09.2025 அன்று சிறப்புடன் தொடங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறோம்.

✍ சங்கங்களின் ஒருங்கிணைந்த பொதுக்குழு கூட்டம் தொடர்பாக மையச்சங்க செயற்குழு கூட்டம் 16.09.2025 அன்று நடத்தப்பட்டது அதன் தீர்மானங்கள் பிரிதொரு பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

✍ பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை என இரு துறைகளுக்கும் தற்போதைய சூழலுக்கு ஏற்ப பணி விதிகள் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளதால் அதனை வலியுறுத்தி முதன்மை தலைமை பொறியாளர் மற்றும் தலைமை பொறியாளர் (பொது), நீ.வ.து. மற்றும் முதன்மை தலைமை பொறியாளர் மற்றும் தலைமை பொறியாளர் (பொது), பொ.ப.து. ஆகியோர்களிடம் கோரிக்கை கடிதம் அளிக்கப்பட்டுள்ளது.

✍ ஊதியம் தொடர்பான வழக்கில் அரசு மேல்முறையீடு என்ற பெயரில் ஏற்படுத்துகின்ற காலதாமதத்தை தவிர்த்திட வழக்கறிஞரிடம் ஆலோசித்ததில் நீதிமன்றத்தில் நேரடி முறையீடு செய்து வழக்கு விசாரணை கொண்டுவரவும், பிற துறை சங்கங்களுடன் சேர்த்து வழக்கு விசாரணை துரிதப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

✍ நமது சங்கங்களின் பொதுக்குழு கூட்டம் வருகின்ற 25.10.2025 அன்று சென்னை **"Hotel Savera"** Mylapore, Chennai-600004-ல் நடைபெறவுள்ளது என்பதை மிகவும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம். பொதுக்கூட்டத்தில் கிளைச் சங்கத்தின் பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

✍ கடந்த மையச் சங்கச் செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டபடி பொறியாளர் சேமநலநிதி தொடர்பாக TNSC BANK, CCC BANK உள்ளிட்ட வங்கிகளிலிருநது 18க்கும் மேற்பட்ட வைப்பு நிதிகளை மாற்றி SBI போன்ற தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் மூன்று வைப்பு நிதிகளாக மாற்றப்பட்டுள்ளது.

✍ பொறியாளர் உறுப்பினர்கள் அனைவருக்கும் பொறியாளர் தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மிக்க அன்புடன்,

**பொறிஞர்.H.வேலன்,**
பொதுச் செயலாளர், உதவிப் பொறியாளர் சங்கம்

**பொறிஞர்.மு.தனசேகரன்,**
பொதுச் செயலாளர்,பொறியாளர் சங்கம்

## ENGIBEF PHASE-V SCHEME

| S. No. | ENGIBEF No. | Recipt No & Amount | Name & Address |
|---|---|---|---|
| 1 | **V-786-CHE** | R.No.838<br>Rs.8,500 | **Er.K.SUBBIAH,**<br>EE, WRD, DVAC, Chennai (O/D) |
| 2 | **V-787-CUD&VM** | R.No.839<br>Rs.10,500 | **Er.H.VELAN,**<br>AE, WRD, Buildings (C&M) Div.I, Sub Div.II, Sec.II, Ch-5 |
| 3 | **V-788-TRY** | R.No.840<br>Rs.10,500 | **Er.M.AMUTHA,**<br>AE, WRD, O/o SE, Middle Cauvery Basin Circle, Trichy |
| 4 | **V-789-CHE** | R.No.844<br>Rs.10,500 | **Er.M.A.SALEENA,**<br>AE, WRD, O/o EE, WRD, Designs Division, Chepauk, Ch-5 |

We request our member engineers who have not enrolled so far in ENGIBEF Phase V Scheme to enroll as full-fledged member by remitting the amount through core banking system '**TNPWD ENGIBEF, State Bank of India, A/C No.10031641514 of PWD Complex Branch, Chepauk, (IFSC Code SBIN0006489), Chennai" or through branch offices in Cash / Cheque.**

We solicit your earnest co-operation to enroll in this Scheme & help the deceased Engineers' family.

**"We expect more members to enroll in ENGIBEF PHASE V"**

**Er.D.Rajeshwar Babu**
Treasurer/ENGIBEF (Cell:9894154915)

**Er.S.Eswari**
Secretary/ENGIBEF

**JOIN ENGIBEF** **JOIN ENGIBEF** **JOIN ENGIBEF**





திருச்சி மண்டலத்தின் நீ.வ.து. தலைமை பொறியாளராக பதவி உயர்வு பெற்ற பொறி. S.சிவகுமார் மற்றும் சிறப்பு திட்ட வட்டம், நீ.வ.து, திருச்சியில் கண்காணிப்பு பொறியாளராக பதவி உயர்வு பெற்ற பொறி.S.பழனிவேல் ஆகியோர்களுக்கு நமது தலைமைச் சங்கப் பொறுப்பாளர்கள் மற்றும் கிளைச் சங்கப் பொறுப்பாளர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.



25.08.2025 அன்று பதவி உயர்வின் மூலம் கண்காணிப்புப் பொறியாளர், சிறப்பு திட்ட வட்டம், நீ.வ.து.யாக பதவி உயர்வு பெற்ற பொறி. S.பழனிவேல் அவர்களை நமது பொறியாளர் சங்கம் மற்றும் உதவிப் பொறியாளர் சங்கம், திருச்சி கிளைச் சங்கப் பொறுப்பாளர்கள் நேரில் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.



26.08.2025 அன்று திண்டுக்கலில் நடைபெற்ற பொறியாளர் சங்கத்தின் முன்னாள் தலைவர் பொறி.M.சுப்ரமணியன் அவர்களின் மகனின் திருமண விழாவில் நமது தலைமைச் சங்க முன்னாள் மற்றும் இன்னாள் பொறுப்பாளர்கள் நேரில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

## SPECIAL CONTRIBUTIONS

| Sl.No | Name | Amount | Remarks |
|---|---|---|---|
| 1. | **Er.R.MANIVANNNAN,** Former Deputy Chief Engineer, WRD, PF, Chennai | **5,000** | Contribution to AOE on the eve of his retirement |
| 2 | **Er.R.THANGARAJ,** Chief Engineer, WRD, O&M, Chennai | **25,000** | Contribution to AOE on the eve of his SE-CE Promotion |
| 3 | **Lower Bhavani Basin Division, Erode** | **10,000** | Contribution to AOE for the welfare of Association |
| 4 | **Er.S.PALANIVEL,** Superintending Engineer, WRD, Special Project Circle, Trichy | **10,000** | Contribution to AOE on the eve of his EE-SE Promotion |
| 5 | **1. Er.N.LENINPRIYA .2. Er.K.SIVAKUMAR 3. Er.D.SIVASANKARAN 4. Er.R.ASHOKKUMAR** (2007 Batch WRD, Engineers) | **22,500** | Contribution to AOE on the eve of their AE - AEE Promotion |
| 6 | **1. Er.P.VADIVELAN, 2. Er.S.SENTHAN 3. Er.S.ARUNGANESH, 4. Er.J.NAMBIRAJAN** (2007 Batch WRD, Engineers) | **22,500** | Contribution to AOE on the eve of their AE - AEE Promotion |
| 7 | **Er.M.SHANMUGAM,** Former Superintending Engineer, WRD, Lower Cauvery Basin Circle, Thanjavur | **25,000** | Contribution to AOE on the eve of his retirement |
| 8 | **Er.M.SHANMUGAM,** Former Superintending Engineer, WRD, Lower Cauvery Basin Circle, Thanjavur | **25,000** | Contribution to AOE & PRI Employees Welfare Fund on the eve of his retirement |

**We thank the above Engineer for their valuable contributions – Editor**

## Promotion of Executive Engineers as Superintending Engineers in WRD, Vide G.O.(2D)No.26, Water Resources (A2), Department dated 29.08.2025

| | | |
|---|---|---|
| 1 | **Er.N.Anbuselvam** Executive Engineer, WRD, Lower Vaigai Basin Division, Paramakudi | Superintending Engineer, WRD, Special Project Circle, Avinashi |

**We congratulate the above Engineer for his promotion as Superintending Engineers– Editor**

## Tranfer of Superintending Engineers in PWD, Vide G.O.(Rt)No.153, Public Works (Estt-I(1)), Department, dated 26.09.2025

| | | |
|---|---|---|
| 1 | **Er.A.Balaravikumar,** Superintending Engineer, PWD, Dr.J.Jayalality Fisheries University, Nagapattinam (O/D) | Superintending Engineer, PWD, Buildings (C&M) Circle, Salem |
| 2 | **Er.C.Ayyasamy,** Superintending Engineer, PWD, Buildings (C&M) Circle, Madurai | Superintending Engineer, PWD, Dr.J.Jayalality Fisheries University, Nagapattinam (O/D) |
| 3 | **Er.V.Senthur,** Superintending Engineer, PWD | Superintending Engineer, PWD, Buildings (C&M) Circle, Madurai |

# MINUTES OF THE 12th PEC MEETING HELD ON 16.09.2025 @ AOE & AEA OFFICE PREMISES, CHEPAKKAM, CHENNAI-5

The 12th PEC meeting was held on 16.09.2025 evening 6.30 PM at Association office. Er.S.Srinivasan, President, AEA presided the meeting and welcomed the members. The following agenda was briefed by Er.M.Dhanasekaran, General Secretary, AOE.

1) **Pay Case – Present status and follow up action.**
2) **Promotion Panels & Postings.**
3) **Conducting General Body Meeting.**
4) **Accounts of AOE, AEA, Legal, ENGIBEF, PRI and Annual Report of AOE & AEA**
5) **Any other Subjects.**

**Discussion:**

The PEC primarily focuses on, conducting General Body meeting. The General Secretary, AOE expressed the view of members from various branches regarding conducting the General Body meeting in a grand manner and also said that the time duration available for completing preliminary activities towards General Body meeting is not adequate at present.

Hence he proposed to postpone the General Body meeting and suggested to have General Body meeting on 25.10.2025 in **"Savera Hotel"** Chennai, to make it memorable event.

Regarding Pay Case, we request our Advocate to represent about its necessary in open court to list it for early hearing.

Er.S.Srinivsan, President, AEA suggested to form a committees for conducting General Body meeting like committee for Transportation and Accommodation, which will be the major task to be concentrated at the time of General Body meeting.

Er.S.Vetrivel, EC Member, AOE and Er.K.Stalin, Vice President, AEA offered their service regarding accommodation.

Er.M.Mathan, EC Member, AOE suggested to have separate vehicle arrangements between PRI to Savera Hotel until the completion of General Body meeting.

Er.D.Rajeshwar Babu, Treasurer, ENGIBEF completed the task of closing various deposits at various banks and bring it into single account, and also suggest to have 3 nos of deposits in SBI. In this regard the PEC appreciate the activities carried by Er.D.Rajeshwar Babu, Treasurer, ENGIBEF and Er.S.Eswari, Secretary, ENGIBEF.

The General Secretary, AOE briefed the necessity of completing the Account Statements for AOE, AEA, Legal Fund, ENGIBEF and PRI before General Body meeting.

**Resolutions:**

After discussion the following resolutions were passed unanimously:

i. Resolved to conduct General Body meeting on 25.10.2025 at Savera Hotel in Chennai.

ii. Resolved to complete account statement and present it next PEC probably on 22.10.2025 for preliminary approval prior to GB.

iii. Resolved to request Engineer-in-Chief and Chief Engineer (General), PWD & WRD to have amended service rule which protect service right of Engineers.

iv. Resolved to form committees for conducting General Body meeting regarding Transport and Logistic arrangements, Accomodation arrangements by Er.S.Vetrivel & Er.K.Stalin.

v. Resolved to closing 18 fixed deposit of ENGIBEF in TNSC Bank, Korattur Branch and transfer them to SBI Bank, Chepauk Branch as 3 fixed deposit.

The meeting concluded with a vote of thanks delivered by **Er.H.Velan,** General Secretary, AEA.

| **Er.H.Velan** | **Er.M.Dhanasekaran** |
|---|---|
| General Secretary, AEA | General Secretary, AOE |

To

All PEC Members of AOE & AEA, All Branches of AOE & AEA

## இரங்கல்:

**திரு.S.மாடசாமி, வயது 81 (பொறி.M.பாலாஜி, உதவிசெயற்பொறியாளர், பொ.ப.து. கட்டட (க&ப) உப கோட்டம், விழுப்புரம்)** அவர்களின் அன்புத் தந்தையார் அவர்கள் 06.09.2025 அன்று சென்னையில் காலமானார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். தனது தந்தையாரை இழந்து வருந்தும் **பொறி.M.பாலாஜி** அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் நம்முடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**திரு.S.கோபால், வயது 83 (பொறி.G.பாலமுருகன், உதவிசெயற்பொறியாளர், பொ.ப.து. கட்டட (க&ப) உப கோட்டம்-II, திருச்சி)** அவர்களின் அன்புத் தந்தையார் அவர்கள் 24.09.2025 அன்று சேலத்தில் காலமானார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். தனது தந்தையாரை இழந்து வருந்தும் **பொறி.G.பாலமுருகன்** அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் நம்முடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**திருமதி.C.சாந்தி, வயது 61 (பொறி.C.மலர்விழி, உதவிசெயற்பொறியாளர், நீ.வ.து. தரக்கட்டுப்பாடு உபகோட்டம், மதுரை, பொறி.கனிமொழி, உதவிபொறியாளர், நீ.வ.து. தரக்கட்டுப்பாடு உபகோட்டம், விருதுநகர்** அவர்களின் அன்புத் தாயார் **மற்றும் பொறி.R.சந்திரமோகன், உதவிசெயற்பொறியாளர், நீ.வ.து. கீழ்வைகை வடிநில உபகோட்டம், பரமக்குடி** அவர்களின் அன்பு மாமியார் 24.09.2025 அன்று மதுரையில் காலமானார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். **- ஆசிரியர்**

## கன்னியாகுமரி கிளை:

கன்னியாகுமரி கிளை பொறியாளர் சங்கம் மற்றும் உதவிபொறியாளர் சங்க கூட்டம் 26.08.2025 அன்று மாலை 3.00 மணியளவில் குமரி பொறியாளர் இல்ல கூட்ட அரங்கம், நாகர்கோவிலில் **பொறி.S.ரமேஷ்,** தலைமை பொறியாளர், நீ.வ.து., மதுரை மண்டலம், அவர்கள் தலைமையில் செயற்பொறியாளர்கள் **பொறி.A.வசந்தி** மற்றும் **பொறி.B.அருள்சன்** பிரைட் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கன்னியாகுமரி கிளை பொறியாளர்கள் சங்கத்தின் செயலாளராக செயல்பட்டு வந்த **பொறி.J.R.வின்ஸ்டன் லாரன்ஸ்** அவர்கள் பணி ஓய்வு பெற்றதை முன்னிட்டு, அவருக்கு நினைவு பரிசு வழங்கி வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. மேலும் உதவிசெயற்பொறியளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ள கன்னியாகுமரி கிளையை சார்ந்த பொறியாளர்களுக்கு சால்வை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. பின்னர் கன்னியாகுமரி கிளை சங்க பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் சங்க நடவடிக்கைகளுக்கான தங்கள் கருத்துகளை எடுத்துரைத்தனர். அதனடிப்படையில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. கன்னியாகுமரி கிளை பொறியாளர் சங்க செயலாளராக செயல்பட்டு வந்த **பொறி.J.R.வின்ஸ்டன் லாரன்ஸ்** அவர்கள் பணி ஓய்வு பெற்றுள்ளதால் பொறியாளர் சங்க செயலாளராக **பொறி.S.V.சுபாஷ்** அவர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2. உதவிபொறியாளர்கள் பலருக்கு கூடுதல் பொறுப்பு கவனித்ததற்கான கூடுதல் பொறுப்புப்படி கிடைக்கப்பெறாமல் உள்ளது. இது தொடர்பான கோப்புகள் யாவும் நீண்டகாலமாக நிலுவையில் இருந்து வருகிறது. எனவே, முதன்மை தலைமை பொறியாளர் மற்றும் தலைமை பொறியாளர்கள் மூலம் கூடுதல் பொறுப்புப்படி வழங்குவதற்கு உரிய சுற்றறிக்கை வழங்க தலைமைச் சங்கம் நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறது.

3. பொறியாளர்கள் மீது தொடரப்படும் ஒழுங்கு நடவடிக்கைகள் மீதான விசாரணைகள் மேற்கொண்டு உரிய முடிவுகள் எடுப்பதற்கு மிகுந்த காலதாமதம் ஏற்படுவதாக தெரியவருகிறது. இதனால் பல பொறியாளர்கள் உரிய காலத்தில் பதவி உயர்வுகள் பெற இயலாத நிலையில் பாதிக்கப்படுகின்றனர். எனவெ உரிய கால அவகாசத்திற்குள் பொறியாளர்கள் மீது தொடரப்படும் ஒழுங்கு நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வரவும், ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையிலுள்ள காலங்களில் பொறியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய பதவி உயர்வுகளை வழங்கவும் விதிகளில் உரிய திருத்தங்கள் செய்ய முதன்மை தலைமை பொறியாளர் மூலம் அரசுக்கு கருத்துரு சமர்பிக்க தலைமைச் சங்கம் நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. முறை கோட்டங்களில் பணிபுரியும் பொறியாளர்கள் தங்கள் பணிகளை மேற்கொள்ள உரிய கீழ்நிலைப் பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் மிகுந்த சிரமங்களுக்கும் மன உளைச்சலுக்கும் ஆளாகி வருகிறார்கள். எனவே உரிய பணியாளர்களை நியமனம் செய்வதற்கான நடவடிக்கைகளை முதன்மை தலைமை பொறியாளர் மூலம் மேற்கொள்ள தலைமைச் சங்கத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**பொறி.A.திவ்யா,** செயலாளர்,
உதவிபொறியாளர் சங்கம், கன்னியாகுமரி கிளை

**பொறி.S.V.சுபாஷ்,** செயலாளர்,
பொறியாளர் சங்கம், கன்னியாகுமரி கிளை

## ஈரோடு கிளை:

The meeting held on 28.06.2025 was presided over by **Er.D.Krishnamurthy**, President, AOE, Erode Branch and attended by our member Engineers. The purpose of the meeting was to felicitate the recently promoted Engineers and to discuss relevant administrative and procedural improvements.

The meeting commenced with a warm welcome address by **Er.D.Chandrasekar,** Secretary, AOE, Erode Branch who congratulated the promoted Engineers and acknowledged their dedication and service. Each promoted Engineer was honoured with a shawl and a memento. Senior Engineers addressed the gathering and encouraged the Engineers to continue their exemplary performance in their new roles. Member Engineers who have not paid the subscription amount are requested to do so at the earliest.

Following resolutions were passed in this meeting:

1. Reposting orders from CE, SE & EE not mandatory:

It was unanimously resolved that once a transfer order is issued, there should be no requirement to obtain reposting orders again from the concerned Chief Engineer, Superintending Engineer or Executive Engineer. This redundant process causes unnecessary delays in the joining procedure and affects continuity of work. Hence, it was resolved that joining should be allowed directly based on the original transfer order, streamlining the administrative process.

2. Vacancies not filled due to absence of Junior Engineers in promotion Panel to be considered for Assistant Engineers:

It was noted that the recent promotion panel did not include any Junior Engineers (JE), resulting in serveral unfilled vacancies. It was resolved that such unutilized vacancies may be reallocated and considered for the promotion of Assistant Engineers (AE), ensuring optimal use of available posts and supporting career progression for eligible AEs.

3. Native Taluk Posting for AEs in Non-sensitive posts

It was resolved that Assistant Enginers who are posted in non-sensitive posts may be considered for posting in their native taluks. This move is expected to enhance job satisfaction and stability among AEs, contributing to better productivity.

4. TNPSC AE recruitment must be interview based:

It was strongly felt that the current TNPSC recruitment process for Assistant Engineers, which is based solely on written examination, undermines the prestige and caliber expected of the AE post. It was resolved to recommend that AE recruitment through TNPSC be reclassified as an interview based selection. This would ensure a more holistic evaluation of candidates and uphold the dignity of the post.

The meeting concluded with a vote of thanks delivered by **Er.R.Kumar,** Secretary, AEA, Erode branch who expressed gratitude to the dignitaries, organizing team, and all attendees for their valuable presence and contributions.

The meeting ended with a grand lunch organised in honour of the promoted Engineers.

**Er.R.Kumar**
Secretary, AEA, Erode Branch

**Er.D.Chandrasekar**
Secretary, AOE, Erode Branch

# <u>பொறியாளர் உறுப்பினர்களின் கவனத்திற்கு...</u>

**நமது சங்கங்களின் Whatsapp எண் : 8056624013**

**நமது சங்கங்களின் GPAY எண் : 8056624013**

**நமது சங்கத்தின் (AOE TNPWD) வங்கி கணக்கின் UPI ID: aoetnpwd@sbi-யை ஆண்டு சந்தா மற்றும் சிறப்பு நிதி வழங்க பயன்படுத்திக்கொள்ளுமாறு உறுப்பினர்களை கேட்டுக்கொள்கிறோம்.**

**Whatsapp எண்ணில் Transaction ID-யை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

QR Code for the Account of AOE:

**<u>A/c Name; AOETNPWD A/c No.10031640837</u>**

**இப்படிக்கு**

**பொறி.D.சிவகுமார்**
பொருளாளர், பொறியாளர் சங்கம் மற்றும்
உதவி பொறியளார் சங்கம
செல் : 9566731113

**பொறி.M.தனசேகரன்,**
பொதுச் செயலாளர்,
பொறியாளர் சங்கம்

**ABSTRACT**

Rules - Rule 56(1)(c) of the Fundamental Rules – Not permitting to retire but retaining in service – Amendments to the Fundamental Rules and the Tamil Nadu Leave Rules – Orders – Issued.

---

**HUMAN RESOURCES MANAGEMENT (FR-III) DEPARTMENT**

**G.O. (Ms.) No. 47** **Dated: 29.08.2025**

**விசுவாவசு, ஆவணி – 13**

**திருவள்ளுவர் ஆண்டு - 2056**

**Read :**

G.O. (Ms). No.111, Human Resources Management (N) Department, dated 11.10.2021.

*****

**ORDER:**

Considering the various demands of the service associations of the Government Employees/Teachers, an announcement was made by Hon'ble Chief Minister on the floor of Assembly on 07.09.2021 under rule 110 of the Tamil Nadu Legislative Assembly Rules as follows:-

"ஓய்வு பெறும் நாளில் அரசுப் பணியாளர்கள் தற்காலிகப் பணிநீக்கத்தில் வைக்கும் நடைமுறை தவிர்க்கப்படும்".

2. In order to implement the above announcement, in the Government order read above, the Government have issued various guidelines. As per the aforesaid Government order, among others, the disciplinary authorities have to ensure that the suspension orders are not issued on the date of retirement of the Government servants.

3. Rule 56(1)(c) of the Fundamental Rules provides that a Government servant who is under suspension, - (i) on a charge of misconduct; or (ii) against whom an enquiry into grave charges of criminal misconduct or allegations of criminal misconduct, is pending; or (iii) against whom an enquiry into grave charges is contemplated or is pending; or (iv) against whom a complaint of criminal offence is under investigation or trial, shall not be permitted by the appointing authority to retire on his reaching the date of retirement, but shall be retained in service until the enquiry into the charge of misconduct or criminal misconduct or the enquiry into allegations of criminal misconduct or the enquiry into contemplated charges or disciplinary proceeding taken under rule 17(c) of the Tamil Nadu Civil Services (Discipline

(P.T.O)

and Appeal) Rules or rule 3(c) of the Tamil Nadu Police Sub-ordinate Service (Discipline and Appeal) Rules, as the case may be, in respect of item (iv) above is concluded and a final order passed thereon by the competent authority or by any higher authority.

4. The Government after careful consideration of the aforesaid issue have decided to make suitable amendments to the Fundamental Rules and the Tamil Nadu Leave Rules, 1933.

5. Accordingly, the following Notification shall be published in the *Tamil Nadu Government Gazette Extraordinary dated:29.08.2025:-*

## NOTIFICATION

In exercise of the powers conferred by the proviso to Article 309 read with Article 313 of the Constitution of India and of all other powers hereunto enabling, the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Fundamental Rules :-

## AMENDMENTS

In the said Fundamental Rules, -

(1) **in rule 53**, in sub rule (1), in clause (a), the second proviso shall be omitted;

(2) **in rule 56**, -

(a) in sub-rule (1), clause (c) including the Explanation, Instruction and the Ruling thereunder shall be omitted;

(b) after sub-rule (1), as so amended, the following sub-rules shall be inserted, namely:-

"**(1-A) Continuation of pending disciplinary proceedings**.- The disciplinary proceedings pending against the Government servants on the date of their retirement shall be continued under clause (a) of sub-rule (2) of rule 9 of the Tamil Nadu Pension Rules, 1978 or under sub-rule (1-B) hereunder, as the case may be:

Provided that the Government servants who were under suspension and not permitted to retire but retained in service beyond the date of their superannuation under the erstwhile clause (c) of sub-rule (1) shall be deemed to have been retired from service on their respective dates of superannuation and the disciplinary proceedings pending against them shall be continued under clause (a) of sub-rule (2) of rule 9 of the Tamil Nadu Pension Rules, 1978 or under sub-rule (1-B) hereunder, as the case may be.

**(1-B) Right of competent authority to withhold contribution made by the Government to the pension account.**- (1) The competent authority reserves to itself the right of withholding the contribution made by the Government towards the pension account of a Government servant, who was appointed on or after 01.04.2003, either in full or in part and of ordering recovery from such the contribution of the whole or part of any pecuniary loss caused to the Government, if such Government servant is found in a departmental or judicial proceedings to have been guilty of grave misconduct or to have caused pecuniary loss to the Government by misconduct or negligence, during his service:

Provided that before passing an order under this clause, the Tamil Nadu Public Service Commission shall be consulted by the Government in respect of Government servants belonged to State Service and in respect of Government Servant other than the State Service, the Head of Department concerned, after arriving at the amount of recovery, shall refer the case to the Government and the Government, after consulting the Tamil Nadu Public Service Commission, shall intimate the views of the Commission to the Head of the Department concerned for issue of final orders:

Provided further that, -

(a) such departmental proceeding, if instituted while the Government servant was in service, shall after the retirement of such Government servant, be deemed to be a proceeding under this sub-rule and shall be continued and concluded by the authority by which it was commenced in the same manner as if the Government servant had continued in service.

(b) such departmental proceeding, if not instituted while the Government servant was in service before his retirement,

(i) shall not be instituted save with the sanction of the Government in respect of Government servants who belonged to State Service;

(ii) shall not be in respect of any event which took place more than four years before such institution;

(iii) shall be conducted by such authority and in such place as the Government may direct and in accordance with the procedure applicable to departmental proceeding in which an order of dismissal from service could be made.

(P.T.O)

(2) where any departmental or judicial proceeding referred to in clause (1) is pending/instituted or where a departmental proceeding is continued under clause (a) of the second proviso thereto against a Government servant who has retired on attaining the age of superannuation or otherwise, the contribution made by the Government towards his pension account shall not be paid to him until conclusion of such proceedings or enquiry by the Director of Vigilance and Anti-corruption and issue of final orders thereon.

(3) For the purpose of this rule,-

(a) departmental proceedings shall be deemed to include the enquiry pending before the Tribunal for Disciplinary Proceedings;

(b) departmental proceedings shall be deemed to be instituted on the date on which the statement of charges is issued to the Government servant or if the Government servant has been placed under suspension from an earlier date, on such date; and

(c) judicial proceedings shall be deemed to be instituted,-

(i) in the case of criminal proceedings, on the date of complaint is made or a charge sheet is submitted to the criminal court; and

(ii) in the case of civil proceedings, on the date on which the plaint is presented or an application is made in the court.

(4) For the purpose of this rule, the term 'competent authority' shall mean the Government in respect of the Government servants who belonged to State Service and the Head of the Department concerned in respect of other Government servants.";

(3) **in rule 86**, in clause (a), for the second proviso, the following provisos shall be substituted, namely:-

"Provided further that, in respect of a Government servant who is under suspension, on the date of his superannuation on a charge of misconduct; or against whom an enquiry into grave charges of criminal misconduct or allegations of criminal misconduct is pending; or against whom an enquiry into grave charges is contemplated or is pending; or against whom a complaint of criminal offence is under investigation or trial and whose suspension is revoked on the date of his superannuation, so as to enable him to retire from service, the encashment of earned leave and leave on private affairs shall be deferred by the competent authority, till the enquiry into the charge of misconduct or criminal misconduct is/are concluded and final order

passed thereon by the competent authority. The said benefit of encashment of earned leave and leave on private affairs shall be drawn and disbursed to such Government Servant after regulating his suspension period:

Provided also that in respect of Government servant whose case is not covered under the above proviso, the encashment of earned leave and leave on private affairs shall be drawn and disbursed by the competent authority.";

(4) <u>in Appendix-I, in Annexure-III, in the Tamil Nadu Leave Rules, 1933, in rule 7</u>, for the second proviso, the following provisos shall be substituted, namely:-

"Provided further that, in respect of a Government servant who is under suspension, on the date of his superannuation on a charge of misconduct; or against whom an enquiry into grave charges of criminal misconduct or allegations of criminal misconduct is pending; or against whom an enquiry into grave charges is contemplated or is pending; or against whom a complaint of criminal offence is under investigation or trial and whose suspension is revoked on the date of his superannuation, so as to enable him to retire from service, the encashment of earned leave and leave on private affairs shall be deferred by the competent authority, till the enquiry into the charge of misconduct or criminal misconduct is/are concluded and final order passed thereon by the competent authority. The said benefit of encashment of earned leave and leave on private affairs shall be drawn and disbursed to such Government Servant after regulating his suspension period:

Provided also that in respect of Government servant whose case is not covered under the above proviso, the encashment of earned leave and leave on private affairs shall be drawn and disbursed by the competent authority."

(BY ORDER OF THE GOVERNOR)

C.SAMAYAMOORTHY
SECRETARY TO GOVERNMENT

## PWD - RETIREMENT ON 30.08.2025

| | | |
|---|---|---|
| 1 | பொறி.R.நாராயணமூர்த்தி | இணை தலைமை பொறியாளர் |

அரசாணை (வாலாயம்) எண்.130, பொதுப்பணித்(பணி-I-2)துறை, நாள் : 29.08.2025

**We wish them a happy, peaceful & pleasant retired life - Editor**

**Date : 24.09.2025**

***Dear Engineers,***

We wish to inform that, we are started to finalise the printing of **Engineer's Diary 2026 and Engineer's Calendar 2026** and have to place order on or before 25.10.2025.

We also request the branches to send the list of **Branch Office Bearers** for the year **2025-2026** to the Parent body on or before **17.10.2025** so as to enable us to include the same in the **Engineer's Diary 2026**.

We wish to add that if the list of Branch Office Bearers for the year **2025-2026** is not received in the stipulated time (on or before 17.10.2025). We have no other option except to print the previous year list of Branch Office bearers in the **Engineer's Diary 2026.**

We also request the Branches of AOE & AEA to furnish the **Membership strength & correct requirements of Engineers Diary, Engineers Calendar and Complimentary Diary for their members to the parent body on or before 25.10.2025.**

With kind regards,

Yours truly,

**Er.M.Dhanasekaran,**
General Secretary, AOE

**All Branches of AOE & AEA**
**All PEC members of AOE & AEA**

# CIRCULAR

## "ANNUAL GENERAL BODY" MEETING OF
## AOE – TNPWD & TNWRD and AEA - TNPWD & TNWRD

Dear Engineer,

The "**Annual General Body" meeting of Association of Engineers, TNPWD & TNWRD and Assistant Engineers' Association**, **TNPWD & TNWRD** for the year 2025 is scheduled to be convened on **25.10.2025 (Saturday) @ 10.35 A.M. in Hotel Savera, No.146, Dr.Radhakrishna Road, Mylapore, Chennai-600004** as detailed below:

| | |
|---|---|
| **25.10.2025 (Saturday) 10.35 am – 1.15 pm** | **General Body Meeting of Assistant Engineers' Association, TNPWD & TNWRD** |
| **25.10.2025 (Saturday) 2.00 pm - 5.00 pm** | **General Body Meeting of Association of Engineers, TNPWD & TNWRD** |

### I.Subjects for discussion in the General Body Meeting of AEA

1. Annual Report for AEA
2. Pay scale cases.
3. Promotion Panels.
4. Court Cases.
5. Any other subjects raised by the members with the permission of the Chair.

### II.Subjects for discussion in the General Body Meeting of AOE

1. Annual Report for AOE
2. Accounts of Association of Engineers & Assistant Engineers Association, Legal Fund, PRI and ENGIBEF.
3. ENGIBEF V$^{th}$ Phase – Present Stage.
4. Promotion Panels
5. Financial position of our Association and contribution to Legal fund.
6. Any other subjects raised by the members with the permission of the Chair.

- All the member Engineers of our Association are requested to make it convenient to attend the above General Body Meeting in large numbers and offer their candid views for the betterment of our member Engineers and the Department.
- Member Engineers who desire to move any specific resolution in the General Body Meeting are requested to send the same to the General Secretary, AEA and the General Secretary, AOE separately on or before 25.09.2025.
- All the Branch Office bearers of AOE and AEA are requested to take copies of this Circular and circulate the same to all the member Engineers of their respective branches.

**Er.H.VELAN**
General Secretary, AEA

**Er.M.DHANASEKARAN,**
General Secretary, AOE

**Note:** Those who want accommodation are requested to contact the following office bearers.

| | |
|---|---|
| **Er.K.Stalin,B.E.,**<br>Assistant Engineer, WRD &<br>Vice President, AEA,<br>No.89, C.N.K.Road, Chepakkam, Chennai-5<br>**Phone No: 8197836953** | **Er.S.Vetrivel,B.E.,M.B.A.,**<br>Assistant Executive Engineer, WRD & Executive Committee Member, AOE<br>No.89, C.N.K.Road, Chepakkam, Chennai-5,<br>**Phone No: 9940263491** |

**To**

**All the members of AOE & AEA TNPWD & TNWRD**

**Copy to:**

1. The President, AOE TNPWD & TNWRD for Information
2. All the Office Bearers of Parent body - AOE & AEA TNPWD & TNWRD
3. All the Branch Office Bearers of AOE & AEA TNPWD & TNWRD

# பொறியாளர்கள் அனைவருக்கும் ஆசிரியர் தின நல்வாழ்த்துகள்...

அன்ன சத்திரமாயிரம் வைத்தல்

ஆலயம் பதினாயிரம் நாட்டல்

பின்னர் உள்ள தர்மங்கள் யாவும்

பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்

அன்னயாவினும் புண்ணியம் கோடி

ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

எழுத்தறிவித்து இறைவனாய் இருக்கிற ஆசிரிய பெருமக்களுக்கு என்று ஒரு தினம்

குனிந்தால் பாடம் படி

நிமிர்ந்தால் உலகம் படி

என்று நம்மை மனிதர்களாகவும், மாமனிதர்களாகவும் மாற்றுகின்ற தெய்வங்கள்

தன்னலம் பாராது மாணவர்கள் நலம் மட்டுமே பேணும் மாண்பாளர்கள்.

சித்திரை மாதத்து ஓடையை போல

நம்பிக்கை நம்பிக்கை வற்றிப் போன

மாணவர்களை

நம்பிக்கை தேசத்தை நோக்கி நடை போட வைக்கும்

தன்னம்பிக்கை கொண்ட

நமது நம்பிக்கை முனை

எல்லோரையும் வாழ்க்கையில் முன்னேற்றிவிட்டு,

அங்கேயே நிற்கும் ஏணிகள்

நாட்டின் வருங்கால தூண்களை தயாரிக்கும் இயந்திரங்கள்

தன்னையே பட்டை தீட்டிக்கொண்டு

நம்மை சித்திரங்கள் ஆக்கும் சிற்பிகள்

நாம் வாழும் காலம் வரை நாம் போற்றி வணங்கும் தெய்வங்களாகிய

ஆசிரியர் பெருமக்களுக்கு இந்த நன்னாளில் மட்டுமல்ல எந்நாளும் அவர்களை வணங்கி துதிப்போம்...

இங்ஙனம்
**பொறி.ச.திருமாறன்,**
உதவி பொறியாளர்,
நீர்வளத்துறை,
ஆற்று பாதுகாப்பு கோட்டம் ,
திருச்சி.

## பிரம்பு - கவிதை...

வகுப்புத் தலைவனாய் வாழ்ந்த காலம் அது!
மூங்கில் பிரம்பொன்று மூன்றடியில் வேண்டுமென்று!
தலைமை ஆசிரியர் என்னை எடுத்துவர தவறாமல்
கேட்டுவைத்தார்!
விடுமுறையில் வெகுதொலைவில் ஆற்றின் கரையோரம்
அடர்த்தியாய் வளர்ந்து நிற்கும் மூங்கில் காட்டில் அடிக்க
மூன்றடியில்!
அளவாய் வெட்டிய மூங்கில் பிரம்பை அழகாய் முடிச்சி சீவி!
கனுவின்றி காண வழுவழுப்பாய் காய்ந்த கம்பிபோல் தக
தகப்பாய்!
சாட்டை கோல்போல் சாயமிட்டு காயவிட்டு!
சனி ஞாயிறு விடுமுறை முடித்து!
நாளிதழில் மறைத்து எடுத்து சட்டைக்குள் ஒளித்து!
யாருக்கும் தெரியாமல் பள்ளி பின்வாசல் வழிவந்து!
தலைமையாசிரியர் மேசையில் வைத்து!
மெல்ல நடந்து மீண்டும் பள்ளி முன்வாசல் வழிவந்து!
சூது வாது யாதும் அறியாதவன் போல்!
வகுப்புறையில் மண்தரையில் முதல் வரிசையில் முதல்
மாணவனாய்!
இரு கை இறுக கட்டியமர்ந்து மனசுக்குள் சிரித்து!
தலைமை ஆசிரியர் பாடம் நடத்த வரும்போது!
அவரே மறந்த வீட்டுப்பாடத்தை நல்லவனாய் நினைவூட்டி!
எழுதாதவரை எல்லாம் முட்டிபோடவைத்து!
அவரே கேட்காதபோதும் அழகாய் ஓடிவந்து!
வரம்புமீறி பிரம்புகொடுத்து அவர்கையால்!
இவர்கையில் விதவிதமாய் கோலம்போடவைத்து
வாய் மூடி சிரிப்படக்க முடியாமல் சிரித்து!
பகைவர் பழிதீர்த்து ஒன்றிரண்டு தோழரையும் விரோதியாக்கி!
பெருமைகொண்டு படித்து பாடம் ஒப்பித்த எனக்கும்!
ஏதோ ஓர் விடுமுறையில் வீட்டில் விருந்தாளிகள்
வந்துவிட்டுப் போனதால் வீட்டுப்பாடம் எழுத மறக்க!
முட்டிபோடும் நிர்பந்தத்தில் இருக்கும் போது!
என்னைப்போல் நல்லவன் ஒருவன் நினைவூட்டி!
எடுத்துவைத்தான் அதே பிரம்பை பிரம்புக்கு தெரியுமா
அதை முதன் முதலாய் எடுத்துவந்தவன் நான்தான் என்று!
அன்று வழக்கத்திற்கு மாறாய் என்கையில்!
வகுப்புத்தலைவன் எதிலும் எங்கும் முன்மாதிரியாய் இருக்க
வேண்டும் என்பதை சொல்லி அதிகமாய்
கோலம் போட்டார் தலைமை ஆசிரியர்!
அன்று மாலையே அந்த பிரம்பு என்வீட்டு அடுப்பில்
கடுப்பில் சாம்பலானபோதே சந்தோஷம்!
அடுத்தநாள் என் நட்பின் எல்லை விரிந்தது
பகைவரும் நண்பரானார்!
ஏதோ பயத்தில் அதுவும் சுகத்தில் இன்றும் மறவாத
கணக்கு வாய்ப்பாடு தமிழ் செய்யுள்! ஆங்கில இலக்கணம்!
அறிவியல் தேற்றம்! வரலாற்று எல்லை! புவியியல் கோடுகள்!
எல்லாம் மனத்தில் ஆணியடித்தது போல்!
பசுமையாய் கிடப்பது பிரம்பாலே!
அதுமட்டும் அன்று இல்லாமல் போயிருந்தால் நாங்கள்
முகவரியில்லா முகில்களாய் தொலைந்துதான் போயிருப்போம்!
அது பிரம்பல்ல எங்களை படைத்த பிரம்மன்!

இங்ஙனம்
**பொறி.க.பன்னீர்செல்வம்,**
உதவிசெயற்பொறியாளர், பொ.ப.து.,
கட்டட (க&ப), உபகோட்டம்,
குடியாத்தம்

RNI No.TNBIL/2010/35983

Regd.News Magazine

Date of Publication : Third week of every month

தனி பிரதி ரூ.10/-

PORIYAALAR, Egmore RMS / 1 Patrika, Chennai Reg. No.T.N. / CH (C) / 307 / 21 - 23
Posted on : 03.10.2025, Licensed to Post without prepayment under WPP No.TN/PMG(CCR), WPP No.340/21-23

## பொறியாளர்கள் அனைவருக்கும் பொறியாளர் தின நல்வாழ்த்துகள்...

அணைகளுக்கு வித்திட்டார் ஆயிரம் ஆண்டின் முன்னே
ஆலயத்தோடு ஆலைகளையும் கட்டித்தந்தார்
இயந்திரங்கள் பற்பல செய்தார்
ஈட்டியையும் ஈராயிரம் ஆண்டின் முன்னே செய்தார்
உலகையே முழுமையாய் வடிவமைத்தார்
ஊரெங்கும் மென்பொருள் உருவாக்கிவைத்தார்
எண்திசையும் எள்முனையும் அறிந்துவைத்தார்
ஏகலைவன் வித்தைக்கும் வித்திட்டார்
ஐயமின்றி அணுபிளந்து ஒளித்தந்தார்
ஒளிபரவா இடத்தையும் கூட ஒளிரவைத்தார்
ஓசைகளையும் ஒவ்வொன்றாய் தரம்பிரித்தார்
ஔடதத்துறை கருவி ஆயிரமாயிரம் உருவாக்கினார்
இஃதொரு பொறியாளரே எல்லா துறைக்கும் வேரானார்
பொறியாளரே உலகை உருவாக்கினார் இன்றும்
இருதயமாய் இருந்து இயக்குகிறார் என்பதே நிதர்சனம்
இவரில்லையேல் உலகம் கற்காலத்தோடு
கைகட்டி நின்றிருக்கும் என்பதே திண்ணம்
ஈடு இணையில்லா பொறியாளர் புகழ்
காடு மலை வாழும் வரை வாழ்க வாழ்கவே

இங்ஙனம்
**பொறி.க.பன்னீர்செல்வம்,**
உதவிசெயற்பொறியாளர், பொ.ப.து.,
கட்டட (க&ப), உபகோட்டம்,
குடியாத்தம்





கலைகள் உருவாக்கப்படுவதில்லை அது கருவாக்கப்படுகிறது என்று சொல்லுவார்கள்...
தான் கருவாக்கிய எண்ணங்களை
எல்லாம் செவ்வனே செயலாற்றிய சிற்பி...
இந்தியாவில் முதன் முதலில் தானியங்கி மதகுகளை உருவாக்கிய நவீன இந்தியாவின் தந்தை...
பொறியியல் துறையில் ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் அதிகமாக இருந்த அந்த காலத்தில் கே ஆர் எஸ் என்று அழைக்கப்படுகிற கிருஷ்ணராஜ சாகர் நீர்த்தேக்கத்தை நிர்மாணித்த பெருமைக்குரியவர்...
வெடித்து கிளம்புகின்ற உணர்ச்சிக்கு ஒரு விடியல் தேவை என்று துடித்துக் கிளம்புகின்ற பொறியாளர் பட்டாளங்களை வழிநடத்திய பேராசான்... இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னாவை தன்வசம் ஆக்கிய திறமை மிக்க பொறியாளர்... பொறியாளர்களின் தந்தை, சர். மோக்ஷ் குண்டம். விஸ்வேஸ்வரய்யா...
அவர்கள் பிறந்த செப்டம்பர் 15 பொறியாளர்கள் தினமாக கொண்டாடப்படுகிறது...
இதே மாதத்தில் பிறந்த சமூக பொறியாளர்களான தொண்டு செய்து பழுத்த பழம்...
தூய தாடி மார்பில் விழும் மனக்குகையில் சிறுத்தை எழும் மண்டை சுரப்பை உலகு தொழும் ஈரோட்டு வானில் உதித்த எரிக்கின்ற சூரியன்...
பகுத்தறிவு பகலவன்... தந்தை பெரியார்
மற்றும்
தன் பேனா தலை குனிந்த போதெல்லாம்...
தமிழை தலை நிமிரச் செய்தவர்...
தன் பேனா மூடி கழற்றப்படும் போதெல்லாம் தமிழுக்கு மணிமகுடம் சூட்டியவர்..
அறிவுச்சுடர் அண்ணா...
அவர்கள் பிறந்த இந்த நன்னாளில்
பகல் என்றும் பாராது, இரவிலும் துஞ்சாது களப்பணி ஆற்றுகின்ற பொறியாளர்கள். இந்த உலகை உருவாக்கும் பிரம்மாக்கள்
கட்டுப்படாத காற்றைப் போல
கட்டுமானத் துறை,மற்றும் பிற துறைகளில்
வளம் வரும் பொறியாளர்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த பொறியாளர்களுக்கு தின வாழ்த்துகள்...

இங்ஙனம்
**பொறி.ச.திருமாறன்,**
உதவி பொறியாளர்,நீர்வளத்துறை,
ஆற்று பாதுகாப்பு கோட்டம், திருச்சி.

Printed by: **Mr.S.G.PARTHASARATHY**, and Published by: **Er.B.ARUN**,M.E. on behalf of Association of Engineers, PWD & WRD from Association of Engineers, PWD & WRD, PWD Campus, Chepauk, Chennai - 5, and Printed at : V.P.S. Printers, 292, Triplicane High Road, Triplicane, Chennai - 5, and Published at Association of Engineers, PWD & WRD, PWD Campus, Chepauk, Chennai-5, Editor:**Er.M.DHANASEKARAN**,M.E.